இயல் எட்டு

அறம்,
தத்துவம்,
சிந்தனை

பெருவழி

மன்னன் மக்களுக்குக் கொடை அளிப்பது – 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம். ✸

கற்றல் நோக்கங்கள்

- *அறக்கருத்துகளை வேராகக் கொண்ட சங்க இலக்கியங்களின் மையப்பொருளறிதல்.*
- *கட்டுரை, நாடகம் போன்றவற்றின் வடிவங்களைப் படித்துணர்ந்து, சொல்லப்புகும் கருத்தினை வெளிப்படுத்த ஏற்ற வடிவத்தினைத் தேர்ந்தெடுத்து வலுவாகப் பயன்படுத்துதல்.*
- *தத்துவக் கருத்துகளைச் சொல்வதற்கு ஏற்ற மொழி தமிழ் என்பதைப் பாடல்கள் வழி உணர்ந்து சுவைத்தல்.*
- *தமிழின் நான்கு பாவகைகள் குறித்த அறிமுகம் பெற்று மேலும் கற்க ஆர்வம் கொள்ளுதல்.*

✸ பாடநூலில் இடம்பெற்றுள்ள வரலாற்றுச் சுவரோவியங்கள் மூல ஓவியத்தைத் தழுவி உருவாக்கப்பட்டவை.

உரைநடை உலகம்

அறம்

அ

சங்க இலக்கியத்தில் அறம்

நுழையும்முன்

தமிழர் பொருள் ஈட்டி அறம்செய்து இன்புற்றனர்; இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர்; உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர்; சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர்; சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம், சங்ககாலம்.

மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒருதுளி. அவனுக்குள்ளே சமூகம் – சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும்.

சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால், சங்க கால அறங்கள்

இயல்பானவை. 'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று திறனாய்வாளர் ஆர்னால்டு கூறுகிறார். அந்த வகையில் சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளன. சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல.

அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது எனக் கூறப்பட்டது.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" – புறம்.

எனச் சங்ககால வள்ளல்களில் ஒருவரான ஆய் பற்றி ஏணிச்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார். நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

அரசியல் அறம்

சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்', 'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்' மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது. குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார். அரசன் அறநெறியில் ஆட்சிசெய்வதற்கு அமைச்சரும் உதவினர். நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்கிறது மதுரைக்காஞ்சி. 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களை மாங்குடி மருதனார் போற்றுகிறார்.

அறங்கூறவையம்

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

போர் அறம்

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்
எதிர்சென்று எறிதலும் செல்லான் – புறம் 301.

கொடை

வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி.

10th_Tamil_Unit 8.indd 185 12/08/2021 7:03:07 PM

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே

(புறம் 189 :7–8)

என்றார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது. புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது.

அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன. வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன் " என்றெல்லாம் போற்றப்பட்டனர். வழங்குவதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டுகிறார். வள்ளலின் பொருள் இரவலனின் பொருள்; வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை என்று பெரும்பதுமனார் குறிப்பிடுகிறார்.

உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார். பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்கிறார் பரணர். தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாராட்டுகிறார்.

புற இலக்கியங்களில் மட்டுமன்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது.

வள்ளல்கள் மட்டுமன்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளம் புறநானூற்றில் புலப்படுத்தப்பட்டிருக்கிறது.

உதவி

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம்தானே எண்ணெய்யாக இருக்க முடியும்?

பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன் (கலி.139)

என்று பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

'உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே (நற். 210)

உறவினர் கெட, வாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார். இதனால்தான் 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவு' என்கிறது தமிழ் இலக்கியம். 'நிறைவடைகிறவனே செல்வன்'

என்கிறது *சீன நாட்டுத் தாவோயியம்*. உடல் உறுப்புகள் ஒன்றுக்கொன்று உதவுவது போலச் சமூக உறுப்புகளான மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள வேண்டும். இதயம் இரத்தத்தை எல்லாம் தனக்கே வைத்துக் கொண்டால் என்ன ஆவது? இரைப்பை, உணவை அப்படியே தானே வைத்துக் கொண்டால் என்ன ஆவது? பிறருக்கு உதவாமல், மனிதத்திற்குக் கொடும்பாவி கட்டுவது சங்க காலத்தில் இல்லை.

வாய்மை

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா","பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.

'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது; இதற்கு மாறாகப் 'பொய் மொழிக் கொடுஞ்சொல்' என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய்சொல்லக் கூடாது என்பது பல பாடல்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது. வாய்மையைப் பற்றி, சங்ககால மக்கள் கொண்டிருந்த கருத்தழுத்தத்தை இப்பகுதிகள் புலப்படுத்துகின்றன. பொய்ச்சான்று கூறாமையும் வலியுறுத்தப்பட்டது.

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும் சமூக உறுப்பினனாகவும் இயங்குவதற்கும் அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகள் எனலாம்.

தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம் இரண்டாம் தரமானது. இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இயல்பான முதல் தரமான அறங்கள் எனலாம்.

எத்திசையும் புகழ் மணக்க.....

போதிதர்மர்

கி.பி.(பொ.ஆ.) ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மாநகரத்துச் சிற்றரசர் ஒருவர் போதிதர்மர் என்னும் சமயப்பெயர்பூண்டு சீனாவுக்குச் சென்றார். பௌத்த சமயத் தத்துவத்தின் ஒரு பிரிவைப் போதித்தார். அதிலிருந்து உருவானதே "ஜென்" தத்துவம். இது, பின்னர் ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் பரவிச் செழித்து விளங்கியது. போதி தருமருக்குச் சீனர்கள் கோவில் கட்டி சிலை வைத்து இன்றளவும் வணங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

கற்பவை கற்றபின்...

1. பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அறக்கருத்துகளை வலியுறுத்தும் சங்க இலக்கியப் பாடலடிகள் ஐந்தினைத் தொகுத்து அவை கூறும் அறச் செய்திகளை எழுதுக.
2. கொன்றை வேந்தன் முதலான பிற்கால அறநூல்களின் பெயர்களை அறிந்து, அவற்றுள் ஏதேனும் ஒரு நூலின் அறக் கருத்துக்களை எடுத்துக் கொண்டு அவை இன்றும் பொருந்தி நிற்பது குறித்துக் கலந்துரையாடுக.

கவிதைப் பேழை

அறம்

அ

ஞானம்

– தி.சொ.வேணுகோபாலன்

நுழையும்முன்

இயக்கமே உலகம் நிலைத்திருப்பதற்கான அடிப்படை. இயங்குதலின்றி உலகில்லை, உயர்வில்லை. கடல் அலைகளைப்போல் பணிகளும் ஓய்வதில்லை. அலைகள் ஓய்ந்திடின் கடலுமில்லை. பணிகள் ஓய்ந்திடின் உலகமுமில்லை. தனக்கான பணிகளோ உலகிற்கான பணிகளோ அவை அறம் சார்ந்து வளர வேண்டும்.

சாளரத்தின் கதவுகள், சட்டம்;
காற்றுடைக்கும்,
தெருப்புழுதி வந்தொட்டும்.
கரையான் மண் வீடு கட்டும்.
அன்று துடைத்தேன்,
சாயம் அடித்தேன்,
புதுக்கொக்கி பொருத்தினேன்.
காலக்கழுதை
கட்டெறும்பான
இன்றும்
கையிலே
வாளித்தண்ணீர், சாயக்குவளை,
கந்தைத்துணி, கட்டைத் தூரிகை:
அறப்பணி ஓய்வதில்லை
ஓய்ந்திடில் உலகமில்லை!

கோடை வயல் – தொகுப்பு

நூல் வெளி

நம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்ட கவிதை தி.சொ.வேணுகோபாலனின் 'கோடை வயல்' என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இவர் திருவையாற்றில் பிறந்தவர்; மணிப்பால் பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராகப் பணியாற்றியவர்; 'எழுத்து' காலப் புதுக்கவிஞர்களில் ஒருவர். இவரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு மீட்சி விண்ணப்பம்.

கற்பவை கற்றபின்...

1. துளிப்பா ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அதில் வெளிப்படும் கருத்தினைப் பற்றி வகுப்பறையில் இரண்டு நிமிடம் உரை நிகழ்த்துக.
2. திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் தலைப்பினை எழுதி, அகர வரிசைப்படுத்தி அதன் பொருளினை எழுதுக.

கவிதைப் பேழை

அறம்

அ

காலக்கணிதம்

– கண்ணதாசன்

FX691

நுழையும்முன்

கவிஞன் என்பவன் யார்? அவன் குணம் என்ன? அவன் பணி என்ன? மனம் என்னும் வயலில், சொல்லேர் உழவனாக, சிந்தனை விதையைத் தூவி, மடமைக் களை பறித்து, தத்துவ நீர் பாய்ச்சி, அறம் என்னும் கதிர் அறுப்பவன் கவிஞன். காலத்தைக் கணிப்பதால் காலத்தை வென்றவனாகிறான்.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!
செல்வர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்;
பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!
பாசம் மிகுத்தேன்; பற்றுதல் மிகுத்தேன்!
ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்!
உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்;
இல்லா யின்எமர் இல்லம் தட்டுவேன்
வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்
வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்!
பண்டோர் கம்பன், பாரதி, தாசன்
சொல்லா தனசில சொல்லிட முனைவேன்!

புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது!
வளமார் கவிகள் வாக்குமூ லங்கள்
இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு!
கல்லாய் மரமாய்க் காடுமே டாக
மாறா திருக்கயான் வனவிலங் கல்லன்!
**மாற்றம் எனது மானிடத் தத்துவம்;*
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
*நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்! **

நூல் வெளி

'காலக்கணிதம்' என்னும் இப்பாடப்பகுதி கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

'முத்தையா' என்னும் இயற்பெயரைக் கொண்ட கண்ணதாசன் இன்றைய சிவகங்கை மாவட்டத்தின் சிற்றூரான சிறுகூடல்பட்டியில் பிறந்தவர். இவரது பெற்றோர் சாத்தப்பன் – விசாலாட்சி ஆவர். 1949ஆம் ஆண்டு "கலங்காதிரு மனமே" என்ற பாடலை எழுதி, திரைப்படப் பாடலாசிரியரானார். திரையுலகிலும் இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கியவர் கண்ணதாசன். இவர் சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்தவர். தன் திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் மெய்யியலை மக்களிடையே கொண்டு சேர்த்தவர். சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவர் தமிழக அரசின் அரசவைக் கவிஞராகவும் சிறப்பிக்கப்பட்டிருந்தார்.

கற்பவை கற்றபின்...

கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்துரைக்க.

கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும்

நதியின் பிழையன்று
நறும்புனலின்மை அன்றே
பதியின் பிழையன்று
பயந்த நம்மைப் புரந்தான்
மதியின் பிழையன்று
மகன் பிழையன்று மைந்த
விதியின் பிழை நீ
இதற்கென்னை வெகுண்டதென்றன்

– கம்பன்

நதிவெள்ளம் காய்ந்து விட்டால்
நதிசெய்த குற்றம் இல்லை
விதிசெய்த குற்றம் இன்றி
வேறு – யாரம்மா!

– கண்ணதாசன்

விரிவானம்

அறம்

அ

இராமானுசர் – நாடகம்

நுழையும்முன்

நாளுக்கு ஒருமுறை மலர்வது சண்பகம். ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது பிரம்ம கமலம். பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது குறிஞ்சி. தலைமுறைக்கு ஒருமுறை மட்டுமே மலர்வது மூங்கில். அதைப்போல் நம் தலைமுறைக்கு ஒரு முறை பிறப்பவர்கள் ஞானிகள். அவ்வாறு வந்தவரைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்று, இதோ நாடகமாய்...

காட்சி – 1

இடம்: திருக்கோட்டியூர் பூரணர் இல்லம்

பாத்திரங்கள்: இராமானுசர் – கூரேசர் – முதலியாண்டான் – பூரணர்

முதலியாண்டான்: (இராமானுசரைப் பார்த்து) சுவாமிகளே! புனித திருமந்திரத் திருவருள் வேண்டி மீண்டும் இங்கு வந்துள்ளோம். இன்றாவது நமது விருப்பம் நிறைவேறுமா?

இராமானுசர்: முதலி, இதுவரை எத்தனை முறை வந்துள்ளோம்?

முதலியாண்டான்: பெரிய நம்பிகள் கூறினாரென்று பதினெட்டு முறை வந்துள்ளோம் சுவாமிகளே!

இராமானுசர்: வருந்த வேண்டாம் முதலியாண்டார். நம் விருப்பம் இன்று உறுதியாக நிறைவேறும்.

முதலியாண்டான்: எப்படிக் கூறுகிறீர்கள் சுவாமி?

இராமானுசர்: திருமந்திரத் திருவருள் பெறத் தண்டும், கொடியுமாக இராமானுசரை வரச் சொல்லுங்கள் என்னும் செய்தி, பூரணரால் திருவரங்கத்திற்கு அனுப்பப்பட்டதன் அடிப்படையிலேயே வந்துள்ளோம். மனம் தளர வேண்டாம். நமது வருகையை அவருக்குத் தெரிவியுங்கள்.

(வீட்டினுள்ளிருந்து வந்த பூரணர் வாசலில் மூவர் நிற்பதைப் பார்த்துத் திகைக்கிறார்)

கூரேசர்: சுவாமிகளே! வணக்கம்! தங்கள் கட்டளைப்படி புனித திருமந்திரத் திருவருளுக்காக வந்துள்ளோம்.

பூரணர்: அடியவர்களே வணக்கம்! (இராமானுசரைப் பார்த்து) தண்டு, கொடியுடன் உங்களை மட்டும் தானே வரச் சொன்னேன்!

இராமானுசர்: ஆம் சுவாமி! தங்கள் கட்டளை கிடைத்த பின்பே புறப்பட்டோம்.

பூரணர்: பிறகெதற்குத் தாங்கள் உறவுகளை உடன் அழைத்து வந்துள்ளீர்கள்?

இராமானுசர்: சுவாமிகள் என்மேல் கோபம் கொள்ளக் கூடாது. தங்கள் விருப்பப்படியேதான் வந்துள்ளேன். தாங்கள் கூறிய தண்டு, கொடிக்கு இணையானவர்கள் இவர்கள். எனவே அடியவர்களாகிய எங்கள்மேல் கோபம் கொள்ளாது பரிவு கொண்டு திருவருள் புரிய வேண்டும்.

பூரணர்: உடையவர்களே! நான் கூறும் மந்திர மறைபொருள் திருவரங்கனின் திருவருளால் கிடைக்கப் பெற்றது. இது நமது பரம ஆச்சாரியார் ஆளவந்தார் அவர்களால் எனக்கு மட்டுமே கிடைத்த அரிய பொக்கிசம். இதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். இதை நீங்கள் நாள்தோறும் தியானிப்பதால், பிறவித்தளை நீங்கும். இறைவனடி செல்ல இயலும். இளையாழ்வாரே! இவர்களை நீங்கள் தண்டு, கொடி எனக் கூறியதால் உங்கள் மூவருக்குமாகத் திருமந்திரத்தைக் கூறுகிறேன்.

(மூவரும் வீட்டினுள் சென்று மூன்று மனைப்பலகையில் அமர, பூரணர் எதிர் மனைப்பலகையில் அமர்கிறார்)

இராமானுசர்: கோபம் கொள்ளாது திருவருள் கொண்டமைக்குத் தலைவணங்குகிறோம் சுவாமி!

பூரணர் : ஆண்டவனின் அடியவர்களுக்குத் திருமந்திரம் உரைப்பதில் நாம் உளம் மகிழ்கிறோம்.

(மூவரும் கைகூப்பி நன்றி கூறுகின்றனர்)

பூரணர்: நான் கூறுவதை நன்றாகக் கவனியுங்கள். கூறப் போகின்ற திருமந்திர மறைபொருள்கள் உங்கள் மூவருக்கு மட்டுமே தெரிய வேண்டும். வேறு யாரிடமாவது இதை நீங்கள் கூறுவீர்கள் எனில் அது ஆசிரியர் கட்டளையை மீறியதாகும். அப்படி நடந்தால் அதற்குத் தண்டனையாக நரகமே கிட்டும்.

(மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர்)

பூரணர்: ஆச்சாரிய நியமத்தை மீறிய பாவிகளாக நீங்கள் மாற மாட்டீர்கள் என்னும் நம்பிக்கையுடன் திருமந்திரத்தைக் கூறுகிறேன். செவிகளைக் கூர்மைப்படுத்திக் கேளுங்கள். நான் கூறும் திருமந்திரத்தை நீங்களும் சேர்ந்து சொல்லுங்கள்.

'திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன்.'

(பூரணர் கூறிய திருமந்திரத்தை மூவரும் மூன்று முறை உரக்கச் சொல்கின்றனர்.)

பூரணர்: உங்கள் வாழ்வில் இன்றைய நாள் மிகவும் நல்ல நாள். இறைவனின் திருவருளால் இன்று திருமந்திரம் உமக்குக் கிடைத்தது.

இராமானுசர்: உங்கள் திருவருளும் அதில் உள்ளது சுவாமிகளே !

பூரணர்: நான் கூறிய கருத்தைக் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். ஆசிரியர் கட்டளையை மீறிவிட வேண்டாம்.

மூவரும்: நினைவில் உள்ளது சுவாமிகளே! ஆண்டவனின் அடியவர்களாகிய எங்களுக்கு, திருவருள் கொண்டு திருமந்திரம் கூறியமைக்கு மிக்க நன்றி சுவாமிகளே!

காட்சி – 2

இடம் – திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணன் திருக்கோவில்

பாத்திரங்கள் : இராமானுசர், கூரேசர், முதலியாண்டான், பூரணரின் சீடர், பொதுமக்கள்

பொதுமக்களில் ஒருவர்: எல்லாரும் வேகமா எங்கெ போறாங்க?

பொதுமக்களில் மற்றொருவர்: உமக்குச் சேதி தெரியாதா ? வைணவ சாமியாரு ஒருத்தரு பெறவிப் பிணிகளைத் தீர்க்குற மந்திரத்தெச் சொல்லப் போறாராம்.

பொதுமக்களில் இன்னொருவர்: அப்படியா சேதி ! வாங்க நாமும் போகலாம்.

(கோவிலின் மதில் சுவரின் மேல் இராமானுசர் நிற்க, கீழே பொதுமக்களுடன் கூரேசரும், முதலியாண்டானும் நிற்கின்றனர்)

இராமானுசர்: (உரத்த குரலில்) பெரியோர்களே! பக்தியால் முக்திக்கு வழிகாணத் துடிப்பவர்களே! அருகில் வாருங்கள் அனைவரும். இன்னும் அருகில் வாருங்கள். கிடைப்பதற்கரிய பிறவிப்பிணியைத் தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை உங்களுக்குக் கூறுகிறேன். அனைவரும் இணைந்து மந்திரத்தைச் சொல்லுங்கள்.

(இராமானுசருடன் சேர்ந்து அனைவரும் மூன்று முறை கூறுகின்றனர்)

இராமானுசர்: எம்பெருமானே! நான் இன்று உளம் மகிழ்கிறேன். எளிய மக்களுக்குத் தங்களது பிறவிப்பிணியைத் தீர்க்கும் திருமந்திரத்தைக் கூறி அவர்களை உன் திருவடிகளைப் புகலாகப் பெறச் செய்துவிட்டேன்.

கூரேசர்: பார்த்தாயா முதலி, பிறர் நலமாக வாழ, தாம் வருந்திப் பெற்ற மந்திரத்தையும் கூறிவிட்டாரே!

முதலியாண்டான்: பூரணரின் கண்டிப்பையும் மீறிப் பொதுமக்கள் நலனுக்காகக் கூறியது, யாரும் செய்ய இயலாத செயல்.

(கூட்டத்திலிருந்த பூரணரின் சீடர், கைகளால் ஓசை எழுப்பி இராமானுசரைக் கீழே வருமாறு கூப்பிடுகிறார்).

பூரணரின் சீடர்: பூரணரின் வார்த்தையை மீறிவிட்டீர். இங்கு நடந்ததை அறிந்து அவர் கடும் கோபமாக உள்ளார். அவர் இல்லத்துக்குத் தங்களை அழைத்து வரச் சொன்னார்.

இராமானுசர்: உறுதியாக என்மீது கோபமாகத்தான் இருப்பார். வாருங்கள்! அவர் இல்லம் செல்வோம்.

(அனைவரும் பூரணர் இல்லம் நோக்கி நடக்கின்றனர்)

காட்சி 3

இடம் : பூரணர் இல்லம்

பாத்திரங்கள் : இராமானுசர், பூரணர், கூரேசர், முதலியாண்டான்

மூவரும்: வணக்கம் சுவாமிகளே !

பூரணர்: வாருங்கள் சுவாமி! வாருங்கள். நீங்கள் குருவிற்கு நம்பிக்கைக்கேடு செய்து விட்டீர்கள்! இதற்கு என்ன தண்டனை என்று தெரியுமா ?

இராமானுசர்: ஞான குருவே! முதலில் எம்மை மன்னித்தருளுங்கள். நாங்கள் செய்த இரண்டகத்திற்குக் கொடிய தண்டனையான நரகமே கிட்டும் சுவாமிகளே! நான் அதை மறக்கவில்லை.

பூரணர்: அது தெரிந்துமா, நீங்கள் பிழை செய்தீர்கள்?

இராமானுசர்: ஆம் சுவாமிகளே !

பூரணர்: தவறு எனத் தெரிந்தும் ஏன் செய்தீர்கள்?

இராமானுசர்: கிடைப்பதற்கரிய மந்திரத்தைத் தங்களின் திருவருளால் நான் பெற்றேன். அதன் பயன் எனக்கு மட்டுமே கிட்டும். அந்த அருமந்திரத்தை அனைவருக்கும் கூறினால், துன்பத்தில் உழன்று பேதை வாழ்வு வாழ்ந்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களின் பிறவிப்பிணி நீங்கி பேறு பெறுவார்கள்.

இதனால் நான் மட்டுமே தண்டனை கிடைக்கப்பெற்று நரகத்தைச் சேர்வேன். ஆனால் என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும். எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள் சுவாமி!

பூரணர்: எம் பெருமானே! உங்களுக்கு இருந்த பரந்த அருள் உள்ளம் இதுவரை எனக்கு இல்லாமல் போனதே! நம் பரமாச்சாரியார் ஆளவந்தாரின் திரு உள்ளத்தை அறிந்தவர் தாங்கள் மட்டுமே! இறைவனின் திருவருளை உலகிற்கு உணர்த்தியவர் தாங்களே! நான் மகிழ்ச்சி பொங்கக் கூறிய 'எம் பெருமான்' என்னும் திருநாமம் என்றென்றும் உமக்கு நிலைத்து, நீங்கள் நீடூழி வாழ வேண்டும்.

இராமானுசர்: எம்மை மன்னித்தருளியமைக்கு நன்றி சுவாமிகளே! விடை தாருங்கள் !

பூரணர்: விடை தருவதற்கு முன்பு, நான் மற்றொன்றையும் அளிக்கிறேன். இதோ என் மகன் சௌம்ய நாராயணனைத் தங்களிடம் அடைக்கலமாக அளிக்கிறேன். ஏற்றுக்கொண்டு விடை பெறுங்கள் எம் பெருமானே!

இராமானுசர்: சுவாமிகளே! முன்பு கிடைப்பதற்கரிய திருமந்திரத்தை எமக்களித்தீர்கள். இன்றோ உங்களின் அன்புத் திருமகனையும் எமக்களித்துள்ளீர்கள். நான் பெரும்பேறு பெற்றவன் ஆகிவிட்டேன். மிக்க மகிழ்ச்சி. விடை தாருங்கள்! புறப்படுகிறோம்!

(பூரணர் விடை தர இராமானுசர் சௌம்ய நாராயணனுடன் முன் செல்லக் கூரேசரும் முதலியாண்டானும் பின் தொடரப் புறப்பட்டுச் செல்கின்றனர்.)

முன்தோன்றிய மூத்தகுடி

"கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேர்வண் பாரிதண் பறம்பு நாடே!"

புறநானூறு, 118 : 4–5

சிவகங்கை மாவட்டத்தின் பிரான் மலை (பறம்பு மலை)

கற்பவை கற்றபின்...

1. கருத்துகளை உரைநடையாகப் படிப்பதிலும் நாடகமாகப் படிப்பதிலும் நீங்கள் உணரும் வேறுபாடுகள் குறித்துக் கலந்துரையாடுக.

2. இந்நாடகம் வெளிப்படுத்துவது போன்று இராமானுசர் வாழ்க்கை நிகழ்வுகள் சிலவற்றைத் தொகுத்து, அவை குறித்த உங்களின் கருத்துகளை எடுத்துரைக்க.

கற்கண்டு

அறம்

அ

பா – வகை, அலகிடுதல்

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்று ஆறு உறுப்புகளைக் கொண்டது யாப்பு. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப் பாக்கள் உள்ளன. யாப்பின் உறுப்புகள் குறித்து கடந்த ஆண்டில் கற்றதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

பாக்களுக்கு உரிய ஓசைகளைப் பற்றி முதலில் அறிந்துகொள்வோம். பாக்களை ஓசைகளைக் கொண்டே அறியலாம். ஒவ்வொரு பாவும் ஓசையால் வேறுபட்டது. ஓசையானது செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என்று நான்கு வகைப்படும்.

செப்பல் ஓசை

செப்பலோசை வெண்பாவிற்குரியது. அறம் கூறும், குறளும் நாலடியாரும் வெண்பாவில் அமைந்துள்ளன.

அகவல் ஓசை

அகவல் ஓசை ஆசிரியப்பாவுக்கு உரியது. இலக்கணக் கட்டுக்கோப்புக் குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருப்பது அகவற்பா என்னும் ஆசிரியப்பா. சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய காப்பியங்களும் அகவற்பாவில் அமைந்தவை.

துள்ளல் ஓசை

செய்யுளில் இடையிடையே உயர்ந்து வருவது துள்ளல் ஓசை. இது கலிப்பாவுக்கு உரியது.

தூங்கல் ஓசை

தூங்கல் ஓசை வஞ்சிப்பாவுக்கு உரியது.

முன் வகுப்பில் கற்ற ஏழு வகைத் தளைகளையும் நீங்கள் நினைவுகூர்தல் நல்லது.

பா வகைகள்

குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்று ஐந்துவகை வெண்பாக்கள் உள்ளன.

நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என்று நான்கு வகை ஆசிரியப்பாக்கள் உள்ளன.

இனி வெண்பா, ஆசிரியப்பா ஆகியவற்றின் பொது இலக்கணத்தை அட்டவணையில் காணலாம்.

பொது இலக்கணம்	வெண்பா	ஆசிரியப்பா (அகவற்பா)
ஓசை	செப்பல் ஓசை பெற்று வரும்.	அகவல் ஓசை பெற்று வரும்.
சீர்	ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.	ஈரசைச் சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
தளை	இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டும் பயின்று வரும்.	ஆசிரியத் தளை மிகுதியாகவும் வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும்.
அடி	இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும். (கலிவெண்பா பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்.)	மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.
முடிப்பு	ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.	ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு.

மேற்சொன்னவற்றுள் குறள் வெண்பாவின் இலக்கணத்தையும் அலகிடும் முறையினையும் தெரிந்துகொள்வோம்.

குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளாய் வரும். முதலடி நான்கு சீராகவும் (அளவடி) இரண்டாம் அடி மூன்று சீராகவும் (சிந்தடி) வரும்.

அலகிடுதல்

செய்யுளின் சீரை அசை பிரித்து நேரசை, நிரையசை என்று பகுத்துக் காண்பதை முன் வகுப்பில் அறிந்துள்ளோம்.

அலகிடுதல் என்பது சீரைப் பிரித்து அசை பார்த்து, அசைக்கேற்ற வாய்பாடு காணுதல்.

யாப்போசை தரும் பாவோசை

1. செப்பலோசை – இருவர் உரையாடுவது போன்ற ஓசை
2. அகவலோசை – ஒருவர் பேசுதல் போன்ற – சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை
3. துள்ளலோசை – கன்று துள்ளினாற்போலச் சீர்தோறுந் துள்ளிவரும் ஓசை. அதாவது தாழ்ந்து உயர்ந்து வருவது.
4. தூங்கலோசை – சீர்தோறுந் துள்ளாது தூங்கிவரும் ஓசை. தாழ்ந்தே வருவது.

யாப்பதிகாரம், புலவர் குழந்தை

அலகிடுதல் எ.கா. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

வ . எண்	சீர்	அசை	வாய்பாடு
1	உல/கத்/தோ	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
2	டொட்/ட	நேர் நேர்	தேமா
3	வொழு/கல்	நிரை நேர்	புளிமா
4	பல/கற்/றும்	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
5	கல்/லார்	நேர் நேர்	தேமா
6	அறி/விலா	நிரை நிரை	கருவிளம்
7	தார்	நேர்	நாள்

நினைவில் கொள்க.

ஓரசைச் சீர்	ஈரசைச் சீர்	மூவசைச் சீர்	
நேர் – நாள்	நேர் நேர் – தேமா	நேர் நேர் நேர் – தேமாங்காய்	நேர் நேர் நிரை – தேமாங்கனி
நிரை – மலர்	நிரை நேர் – புளிமா	நிரை நேர் நேர் – புளிமாங்காய்	நிரை நேர் நிரை – புளிமாங்கனி
நேர்பு – காசு	நிரை நிரை – கருவிளம்	நிரை நிரை நேர் – கருவிளங்காய்	நிரை நிரை நிரை – கருவிளங்கனி
நிரைபு – பிறப்பு	நேர் நிரை – கூவிளம்	நேர் நிரை நேர் – கூவிளங்காய்	நேர் நிரை நிரை – கூவிளங்கனி

கற்பவை கற்றபின்...

1. பாடநூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளையும் அவற்றின் பாவகைகளையும் வகைப்படுத்திப் பட்டியல் இடுக.
2. வெண்பாவில் அமைந்த நூல்கள், ஆசிரியப்பாவில் அமைந்த இலக்கியங்கள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.

திறன் அறிவோம்

பலவுள் தெரிக.

1. மேன்மை தரும் அறம் என்பது.......
   அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
   ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது
   ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

2. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது ....
   அ) காலம் மாறுவதை
   ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை
   ஈ) வண்ணம் பூசுவதை

3. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும்
   பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
   அ) உதியன்; சேரலாதன்
   ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
   இ) பேகன்; கிள்ளிவளவன்
   ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

4. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்.........
   அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது
   ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்
   ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

5. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ....
   அ) அகவற்பா ஆ) வெண்பா
   இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

குறுவினா

1. 'கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
   உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'
   அ) அடியெதுகையை எடுத்தெழுதுக.
   ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக – கொள்க, குரைக்க
2. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

3. குறிப்பு வரைக – அவையம்.

4. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

5. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

சிறுவினா

1. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

2. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

3. 'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில், பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக. (குறிப்பு – சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்)

4. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

நெடுவினா

1. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

2. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

– கண்ணதாசன்

3. குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி .

மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

மரம் தேடிய களைப்பு
மின்கம்பியில்
இளைப்பாறும் குருவி.

– நாணற்காடன்

விற்பனையில்
காற்றுப் பொட்டலம்
சிக்கனமாய் மூச்சு விடவும்...

– புதுவைத் தமிழ் நெஞ்சன்

மொழிபெயர்க்க.

Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The Second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked". Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.

மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

மரபுத்தொடர்

மனக்கோட்டை	கண்ணும் கருத்தும்
அள்ளி இறைத்தல்	ஆறப்போடுதல்

பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

"தம்பீ? எங்க நிக்கிறே?"

"நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது."

"அங்ஙனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பரப் படிச்சிக்கிட்டு இரு... நா வெரசா வந்துருவேன்"

"அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு!"

"அவம் பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்."

"ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும்!"

"இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போனை வையி. நாங் கௌம்பிட்டேன்..."

"சரிங்கண்ணே"

கடிதம் எழுதுக.

உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன அதனால் இரவில் சாலையில் நடந்துசெல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

www.tntextbooks.in

நயம் பாராட்டுக.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.

– வள்ளலார்

மொழியோடு விளையாடு

கண்டுபிடித்து எழுதுக

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்கள் இடம் பெறும் திருக்குறளைக் கண்டுபிடித்து எழுதுக...

சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.

1. கானடை 2. வருந்தாமரை 3. பிண்ணாக்கு 4. பலகையொலி

எ.கா. கானடை என்பதை,

கான் அடை – காட்டைச் சேர்
கான் நடை – காட்டுக்கு நடத்தல்
கால் நடை – காலால் நடத்தல்

இவ்வாறு மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் கூறலாம்.

செயல்திட்டம்

ஔவையாரின் ஆத்திசூடி, பாரதியாரின் ஆத்திசூடி ஆகிய இரண்டின் முதல் பத்துத் தொடர்களை ஒப்பிட்டு, நாள்தோறும் ஒரு தொடர் என்னும் அடிப்படையில் கருத்துகளைக் காலை வழிபாட்டு நிகழ்வில் வழங்குக.

அகராதியில் காண்க

ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி

கலைச்சொல் அறிவோம்

Belief	–	நம்பிக்கை	Philosopher	–	மெய்யியலாளர்
Renaissance	–	மறுமலர்ச்சி	Revivalism	–	மீட்டுருவாக்கம்

10th_Tamil_Unit 8.indd 200 12/08/2021 7:03:13 PM

www.tntextbooks.in

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

நிற்க அதற்குத் தக...

நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில்பவருடனோ, உடன்பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது..... இந்தச் சமயத்தில் சினம்கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும்...

நாம் செய்யவேண்டுவன (அறங்கள்)	அறங்கள் தரும் நன்மைகள்
நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல்.	நல்ல நண்பர்களைப் பெறலாம்; எதிரிகளையும் நண்பராக்கலாம்.
ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல்.	
பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல்.	

அறிவை விரிவு செய்

அறமும் அரசியலும் – மு. வரதராசனார்

அபி கவிதைகள் - அபி

எண்ணங்கள் – எம்.எஸ். உதயமூர்த்தி

இணையத்தில் காண்க.

https://ta.wikipedia.org/wiki/சங்க_இலக்கியம்

http://tndipr.gov.in/memorials/tamil/kaviarasarkannadasanmanimandapam.html

http://www.ramanujam1000.com/2016/09/blog-post_16.html

10th_Tamil_Unit 8.indd 201 12/08/2021 7:03:13 PM

விதிகளை அறிவோம் ! விழிப்புணர்வு தருவோம் !

இந்த வயதில்தான் மிதிவண்டியை விட்டுவிட்டுப் பெட்ரோல் வண்டிகளை ஓட்டிப் பார்க்க மனம் ஆசைப்படும். அப்பாவிடம், அண்ணனிடம், தெரிந்தவர்களிடம் வண்டிகளை இரவல் வாங்கிச் சாலையில் வேகமாக ஓட்டத்தோன்றும். ஆனால் உரிய ஓட்டுநர் உரிமம் இன்றிச் சாலைகளில் வண்டிகளை ஓட்டக்கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

விதித்திருப்பதை அறிவோம்! அறிந்ததை மற்றவர்களுக்குச் சொல்வோம் – உரிய காலத்தில் பயன்படுத்துவோம்!

ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள்

- சாலைகளில் இடப்பக்கம் வண்டிகள் செல்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்! அதுதான் முதல் விதி.
- சாலையின் ஓரங்களில் இருக்கும் அடையாளப் பலகைகளைப் புரிந்து ஊர்திகளை இயக்கவேண்டும்.
- மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கைப்பட்டை அணியவேண்டும். அதுவே உயிர்ப் பாதுகாப்பு!
- காதுகளை அடைத்தவாறு காதணி பேசிகளை அணிந்துகொண்டு பாடல் கேட்கவேண்டுமானால் பின்னிருக்கையில் அமர்ந்து செல்லுங்கள் – ஊர்தியை இயக்கியவாறு அல்ல!
- சாலையில் இடப்பக்கம் திரும்ப, முடிந்த அளவு இடப்பக்கம் வந்த பிறகு, வண்டியின் இடப்புறச் சைகைவிளக்கை ஒளிரவிட்டவாறு, கண்ணாடியில் கண்காணித்துக்கொண்டே இடப்பக்கமாகத் திரும்பவேண்டும்.
- அதேபோல வலப்பக்கமாகத் திரும்புவதற்கு, முதலில் அதிகக் கவனத்துடன் சாலையின் நடுவில் வரவேண்டும். பிறகு எச்சரிக்கையுடன் வலப்புறச் சைகைவிளக்கை ஒளிரவிட்டவாறு கண்ணாடியில் கண்காணித்துக்கொண்டே திரும்ப வேண்டும்.
- சிலர் பந்தயங்களில் ஓட்டுவதைப்போலச் சாலையில் செல்லும் வண்டிகளை இடமாகவும் வலமாகவும் கடந்து, பின்னால் வருபவர்களுக்குக் கடும் அச்சத்தைக் கிளப்பியவாறு ஓட்டுவார்கள்! அதைப் பார்த்து நாமும் கிளர்ச்சி அடைந்து வேகமாக ஓட்ட முயலக் கூடாது. மித வேகம் – மிகுந்த பாதுகாப்பு!
- சாலையைப் பயன்படுத்தும் அனைவரும் தீயணைப்பு ஊர்திக்கும் பிணியாளர் ஊர்திக்கும் முன்னுரிமை தந்து வழிவிடவேண்டும்.
- சாலையில் இருபுறமும் நடந்துவருபவர்கள் அவர்களுக்குரிய சாலையைக் கடக்கும் இடங்களில் கடப்பதற்கு வழிவிடவேண்டும்.
- ஊர்திகளை அடுத்தவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாதவாறு நிறுத்தவேண்டும்.
- சிவப்பு விளக்கைக் கண்டவுடன் சாலையில் நிறுத்தக் கோட்டுக்கு முன்பாக ஊர்தியை நிறுத்தவேண்டும்.

ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கையில் கட்டாயம் வைத்திருக்க வேண்டியவை :

- ஓட்டுநர் உரிமம்
- ஊர்தியின் பதிவுச் சான்றிதழ்
- ஊர்திக்குச் செலுத்திய வரிச் சான்றிதழ்
- ஊர்திக் காப்பீட்டுச் சான்றிதழ்
- மகிழுந்து, சரக்குந்து போன்ற வண்டிகள், அப்பகுதிகளில் ஓட்டுவதற்கான இசைவுச் சான்றிதழ்

- நமக்கும் சாலையில் பயணிக்கும் பிறருக்கும் விபத்து ஏற்படாவண்ணம் பாதுகாப்பாக ஊர்திகளை இயக்கவேண்டும்.
- விபத்துகளைக் கண்ணுற்றால் முதலுதவி, பிணியாளர் ஊர்தியை அழைத்தல் போன்ற நம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும்

அடுத்தவரின் வலியையும் வேதனையையும் திறன்பேசியில் படமெடுத்து சமூக வலைத்தளங்களில் போடுதல் போன்ற பொறுப்பற்ற செயல்களைக் கட்டாயமாகத் தவிர்க்கவேண்டும்.